தரலாம். ஆனால், நிலவள வங்கிகளின் நிலைமை பற்றி இந்த அறிக்கையில் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. வீடு கட்டுவதற்கு அரசு கடன் தந்து அவர்கள் இறந்து விடுவார்களானால் அவர்கள் மீதி கட்டவேண்டியது தள்ளுபடி ஆகவில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் மாதந்தோறும் 3 ரூபாய் கட்ட வேண்டும் இன்ஷூரன்ஸ் என்ற வகையில். இப்படி எல்லோரும் சேர்ந்து கட்டுகின்ற பணத்திலிருந்துதான் அது தரப்படுகிறதே தவிர வேறு அல்ல. ஆகவே, அதோடு இதை இணைக்கக் கூடாது. ஆனால், சென்ற ஆண்டு தள்ளுபடி செய்ததிலே ஓரளவுக்கு இவர்களுக்கும் சாதகமாக அமைந்திருக்கிறது. தள்ளுபடி என்ற பெயரில் கூட்டுறவுக்குத்தான் தள்ளுபடி ஆகிறதே தவிர அரசுக்குத் தள்ளுபடி என்று ஆகவில்லை. அரசின் பணம்தான் அங்கே போய்ச் சேருகிறது. ஆக, அந்த வகையில் எந்த எந்த அளவுக்கு நன்மைகளும், சலுகைகளும் தர இயலுமோ அந்த அளவுக்குத்தான் விதிமுறைகளின்படி தர இயலும். ஆக, அவர்கள் கேட்டு இருக்கிறார்கள். அதை அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்ததைப் போல தக்காவிக் கடன்களைத் தள்ளுபடி செய்ய அரசு முன் வருமா என அறிய விரும்புவதோடு இன்றைக்கு 100 லட்ச ரூபாய் கேட்டு பிரேரணை வந்திருக்கிறதே, அந்தத் தொகை வருகிற வரைக்கும் இந்தக் கடன்களை அந்த விவசாயிகள் கட்டுவதற்கு அவகாசம் கொடுத்து தள்ளி வைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன் வேறு, தக்காவிக் கடன் வேறு; தக்காவிக் கடன்கள் வருவாய்த் துறையின் மூலமாக அளிக்கப்படுகின்ற ஒன்று. இப்போது தக்காவிக் கடன்கள் தரப்படுவது இல்லை. ஏற்கனவே தரப்பட்ட தக்காவிக் கடன்கள் பற்றி தனிக் கேள்வி போட்டால் அவர்களுடைய நிலைமைகளைப் பற்றி சொல்லலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

## (ஆ) சி. ஐ. டி. நகர் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளுக்குப் பட்டா வழங்குதல்.

*திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''சைதை 140-வது வட்டம் சி.ஐ.டி. நகர் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் ஒரு பகுதியினருக்குப் பட்டா வழங்கப்பட்டும், மீதிப் பகுதியினருக்குப் பட்டா வழங்கப்படாமலிருப்பதும்'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*1987 மார்ச் 5]*

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

உலக வங்கித் திட்டம் பாகம் 2-ன் கீழ் சைதை 140–வது வட்டம் சி.ஐ.டி. நகர்,குத்தகை மற்றும் விற்பனை உடன்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டப் பகுதியில் 249 மனைகளுக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அங்கீகாரம் அளித்துள்ளது. அங்கீகாரத்தின்படி சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்படி பகுதியில் தகுதி வாய்ந்தோர் பட்டியல் தயாரித்து குடிசைமாற்று வாரியத்திற்கு மனைகள் ஒதுக்கீடு வழங்க அனுப்பியுள்ளார். 249 மனைகளில் குத்தகை மற்றும் விற்பனை உடன்பாட்டுத் திட்டத்தின்படி மனைகள் வழங்க தகுதி பெற்றவர்கள் 211 நபர்கள் ஆவர். இவர்களில் முன்பணம் கட்டி குத்தகை மற்றும் விற்பனை உடன் பாடு செய்து கொண்ட 123 நபர்களுக்கு ஒதுக்கீடு வழங்கப் பட்டுள்ளது. மீதமுள்ள நபர்கள் முன்பணம் கட்டாத காரணத் தால் இன்னமும் ஒதுக்கீடு வழங்கப்படவில்லை. இவை போக, மேற்படி பகுதியில் 30–6–84-க்கு முன்பிருந்தே வசித்து வந்த தற்கு குடியிருப்புதாரர்கள் ஆதாரங்கள் காட்டாத காரணத்தால் 26 நபர்களுக்கு தகுதி வாய்ந்தோர் பட்டியல் மாவட்ட ஆட்சி யரால் அனுப்பப்படவில்லை. இப்பகுதியில் பொது உபயோகத் திற்கு 2 மனைகளும், பொதுக் கிணற்றுக்கு 2 மனைகளும், சத்துணவுக் கூடத்திற்கு 1 மனையும் வழங்கப்பட்டுள்ளது. 7 நபர்களுக்கு அவர்களுக்குள்ளே தகராறு என்ற காரணத்தால் தகுதி வாய்ந்தோர் பட்டியல் இன்னமும் மாவட்ட ஆட்சியரால் தயாரித்து வாரியத்திற்கு அனுப்பப்படவில்லை.

எனவே, மீதமுள்ள நபர்கள் முன்பணம் கட்டி தக்க ஆதாரங்கள் கொடுத்த பின்னர் மாவட்ட ஆட்சியரால் தகுதி வாய்ந்தோர் பட்டியல் தயார் செய்யப்பட்டு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் மனைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

*திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் குறிப் பிட்டுள்ளதைப் போல் 211 நபர்களில் 123 நபர்களுக்கு ஒதுக்கீடு வழங்கப்பட்டு, மீதி நபர்கள் முன்பணம் கட்டாத காரணத்தால் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், ஆனால், அந்தத் தகவல்களை உரிய நபர்களுக்குத் தெரியப்படுத்தாத காரணத்தால் அவர்கள் எங்களுக்குப் பட்டா கொடுக்கவில்லை என்று குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, விவர அறிக்கையில் இருக்கின்ற குறிப்பினை சம்பந்தப் பட்ட நபர்களுக்குத் தெரியப்படுத்தினால், அவர்கள் அதற் கேற்றாற்போல் நடவடிக்கை மேற்கொண்டு பட்டா பெற வாய்ப்பாக இருக்கும். எனவே, அமைச்சரவர்கள் அதற்கான நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டு மனை கிடைக்கப் பெறாதோர் குடிசை மாற்று வாரியத்துடன் தொடர்பு கொண்டால் அவர்கள் முன்பணம் ஏறக்குறைய ரூ. 89 கட்ட வேண்டும் என்ற விவரம் அவர்களுக்குச் சொல்லப்படும். தனியாக அவர்களுக்கு அனுப்ப முடியுமா என்பதைக் குடிசை மாற்று வாரியத்தோடு கலந்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கப் படும்.

*திரு. சைதை சா. துரைசாமி: துணைத் தலைவர் அவர்களே, இதே நகரில் அடுத்த பகுதி, சி.ஐ.டி. நகர் கால்வாய் அருகே அமைந்திருக்கின்ற 141-வது வட்டம் லூப் தெருவில் உள்ள 22 குடியிருப்புதாரர்களுக்கு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்குக் குடிசை மாற்று வாரியம் பரிந்துரை செய்தும், அந்த இடம் கால்வாய்க்கு அருகில் இருக்கிறது என்று பட்டா வழங்க MMDA அதிகாரிகள் மறுக்கிறார்கள். எனவே, ஒரு பகுதியான சி.ஐ.டி. நகர் பகுதிக்கு வழங்கியதற்குப் பிறகு, மற்றொரு பகுதியான லூப் தெருவிற்கு அந்தத் திட்டம் பொருந்துகின்ற அடிப்படையில், அந்த 22 நபர்களுக்கு, குடியிருப்புதாரர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, இதுகுறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4. அறிக்கை அளித்தல்.

### பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையை நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்: "இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84-ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) சமூக நலத்துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் நாற்பதாவது அறிக்கை''

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

*திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின்மீது சில கருத்துக்களை நான் இங்கே கூறிக் கொள்ள விருப்புகிறேன்.

நல்ல சில திட்டங்களை உரையில் கூறியிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இருக்கின்ற சாராயக் கடைகளுக்கு மூடு விழா நடத்திய இந்த அரசை மனதாரப் பாராட்டு கிறேன். இருந்தாலும் அதிலேகூட சிறிய வருத்தம் என்ன